

# என் மனை வானில்

## கவிதைகள்

கவிஞர். க. யோகானந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்
# மன
# வானில்

## (கவிதைகள்)

கவிஞர். க. யோகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **"என் மன வானில்"** |
| நூல் வகை | : | கவிதை |
| ஆசிரியர் | : | கனகசூரியம் யோகானந்தன் |
| பதிப்பு ஆண்டு | : | 2009 மார்கழி |
| பதிப்பு விபரம் | : | முதல் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | 'நர்த்தனா' வெளியீட்டகம் |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ) |
| அட்டைப்பட ஓவியம் | : | ஐஸ் கிராபிக்ஸ் |
| அச்சிட்டோர் | : | அஸ்ரா பிறிண்டஸ் திருகோணமலை. இலங்கை |
| நூல் கட்டுமானம் | : | தையல் |
| விலை | : | 150/= |
| ISBN | : | 978-955-0328-00-0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரையாக......

கவிதை என்னும் சிறகைவிரித்து மீண்டும் பறக்க முயற்சி செய்திருக்கிறேன். பல்துறைக்குள் சிக்கிச் சிறைப்பட்டு போகாமல் கவிதை என்ற தாய்த்துறையை அரவணைத்து நிற்கின்றேன். இருவருடங்களுக்கு பின்னர் "என் மனவானில்" என்ற கவிதை நூலைப் பிரசவித்துள்ளேன். என் மனதிலே ஏற்பட்ட மாறாத சோகங்களும், ரணங்களும் கவிதைகளாகி நீட்சி பெற்றுள்ளன.

இக்கவிதைகள் முளைத்திருக்கும் காலம் மக்களின் மனங்களில் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் மறைந்து போன காலம். உலக மாற்றங்களில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருக்கும் மனித மனங்களுக்கு சிறிதளவேனும் நம்பிக்கையை இக்கவிதைகள் தரலாம். என நம்புகின்றேன். தீப்பந்தம் ஏந்திவரும் போதும் கூட அதனைப் பத்திரமாகத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற சித்தாந்தத்திலிருந்து சற்றும் பிசகாமல் எழுதியிருக்கிறேன். முள்ளின் மீது கூட சுலபமாகப் பயணித்து விடலாம். ஆனால் அந்தரத்திலே பறந்துகொண்டு "என்மனவானில்" சற்று ஓய்வெடுத்திருக்கின்றேன். தமிழ் யாப்பென்பது சிலந்திவலை என்ற நிலையிலிருந்து மாற்றம்பெற்று பூக்களைக் கொண்டு பூச்சரம் தொடுப்பது போன்றதென நவீன கவிஞர்கள் நிருபித்துக்காட்டி இருக்கிறார்கள். புதுக்கவிதைகளுக்கு புடைவை கட்டினாலே போதும் அது அழகானதாக மாறிவிடும். விலையான ஆபரணங்கள் தேவையில்லை. தமிழ் இலக்கியத்திற்குத் தாய்ப்பால் ஊட்டியது கவிதைகளே எனலாம்.

இலக்கியம் படைப்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையே நானும் எதிர்நோக்குகின்றேன். கைபோன போக்கில் எழுதி மனம்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிலே வாழ்வதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும். ஆக்க இலக்கிய வரிசையிலே "என் மன வானில்" பூத்த மூன்றாவது நட்சத்திரம். என் இதயத்தின் மூலையிலே மறைந்து கிடக்கும் தாய் மண்ணின் ஏக்கத்தை தீர்க்க வழிதெரியாமல் வாடிக் கொண்டிருக்கிறேன். வார்த்தைகளாலே பந்தல் போடுவதைத்தவிர வேறொன்றும் தெரியவில்லை. இலக்கியத்தை நேசித்தபடியே உறங்கிப் போகிறேன். இந்நூலில் வரும் பல கவிதைகள் "நீங்களும் எழுதலாம்" கவிதைச் சஞ்சிகையில் என்னால் எழுதப்பட்டவை. அத்தோடு ஒரு சில மெல்லிசைப் பாடல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. "என் மன வானில்" எண்ண அலைகள் சுழன்றடித்த போது இத்தொகுப்பினை பற்றிய அணிந்துரையை சிரமங்களின் மத்தியில் எழுதித்தந்த என் அன்பிற்குரிய கேணிப்பித்தன் ச. அருளானந்தம் அவர்களுக்கு என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னைப் பற்றி அறிமுகம் செய்துவைத்திருக்கும் திருக்கோணமலைக் கவிஞர் ஷெல்லிதாஸன் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கு கின்றேன். மற்றும் இக்கவிதைகளை கணினி இறுவட்டில் அமைத்துத்தந்த எமது பாடசாலை ஆசிரியை செல்வி நிலுஷா அன்ரனினா அவர்களுக்கும், ஆலோசனை வழங்கியுதவிய கொழும்புப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கோ. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். நூலை அழகுறப் பதிப்பித்துத் தந்த அஸ்ரா பிரிண்டஸ் நிறுவனத்தாருக்கு நன்றி கூறுகின்றேன்.

**"வாழ்க தமிழ்"**

**T.P: 026-2221807**

**கவிஞர் க. யோகானந்தன்**
**கந்தசாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**
**இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிஞர். க .யோகானந்தன் அவர்களது 'என் மன வானில்' எனும் கவிதை நூலுக்கு அணிந்துரை எவ்வாறு எழுதலாம் என்று சிந்தித்தேன். முதற்சில கவிதை வரிகளைப் படித்துப் பார்க்கலாம் என்ற துணிவில் இதழ்களைப் பிரித்தேன். பார்த்தேன். ஒவ்வொன்றாய்ப் படித்தேன். பின்னர் முடித்தேன். 'என் மன வானில்' சிந்தனைத் துளிகள் பவனிவந்தன. நாமெங்கே இருக்கிறோம்.? நமக்கு என்றொரு பாரம்பரியம் உள்ளதா? அப்படி என்றால் அவையெல்லாம் எங்கே? நாம் வாழ்வது ஒரு பெரும் சூனியமான சூழ்நிலை என்பது அப்புறந்தான் தெரிந்தது. கவிஞர் யோகானந்தன் கூறுவதுபோல் 'முள்ளின்மீது கூடச் சுலபமாகப் பயணித்து விடலாம். கைபோன போக்கில் எழுதி, மனம்போன போக்கில் வாழ்வதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும். தீப்பந்தம் ஏந்திவரும்போது கூட அதனைப் பத்திரமாகத்தான் பயன்படுத்த வேண்டும் என்று அருமையாகக் கூறியுள்ளார்.

இன்றையச் சமூக அரசியல் சூழ்நிலைகளில் நாம் சிக்குண்டு அல்லலுறுவதை அத்தனை கவிதைகளிலும் சிக்கவைத்துள்ளார். முதலில் தான் வாழும் சூழலைப் படமெடுக்கிறார். 'தெருவோர மரங்கள் உதிர்த்த இலைகள்போல், என் உள்ளத்தில் காய்ந்து கிடக்கும் நாளையக் கனவுகள்.' எனத் தனது திட்டங்களைச் செயற்படுத்திச் சாதிக்க முடியாத அவலநிலையைக் காட்டுகிறார். இதயங்கள் எப்படி இருக்கின்றன? வினாவுக்குப் பதிலாக 'துருப்பிடித்த பாத்திரங்களாக, தினந்தினம், மலினமடைந்து போகும் தேசத்தில், காயப்பட்ட மனித இதயங்கள் கண்ணீர் சிந்திநிற்கும் நிலை' எனக் காட்டுகிறார். மனிதன் இந்த உலகில் பெறற்கரிய செல்வமாகக் கொள்வது தனது வாரிசைத்தான்.'பெறுமவற்றுள் மக்கட் செல்வந்தானே சிறந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை உறங்கவைப்பதற்காகத் தாலாட்டில் போற்றி புகழும் பண்பு நமது சமுதாயத்தில் தொண்டு தொட்டு வரும் பாரம்பரியமாகும். ஆனால் நமது இந்தச் சூழலில் 'காட்டுவழி பிறந்தவனே, அகதி மகனாய் ஆனவனே' எனக் கண்ணீரால் தாலாட்டி இன்றையச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டும்போதும் 'தாயாகக் காட்டுவதற்கும், தழுவி உனை அணைப்பதற்கும், மறைந்த கதைகள் சொல்வதற்கும்,மாற்றம் வரும் கண்மணியே கண்ணுறங்கு' என ஒரு நம்பிக்கையைப் படரவிடுகிறார்.

திருவள்ளுவர் முப்பத்துமூன்று அதிகாரங்களில் திருக்குறளைத் தந்தார். நமது கவிஞர் யோகானந்தன் 'காயப்பட்ட உள்ளங்கள் தொடக்கம் மழைக்காலம்' வரை முப்பத்து மூன்று தலைப்புகளில், 'என் மன வானில்.' கவிதை நூலைத் தந்துள்ளார். திருவள்ளுவர் குறள்வெண்பாவில் தனது நூலைத் தந்தார். யோகானந்தன் புதுக்கவிதையில் தனது நூலினைத் தந்துள்ளார். இரண்டு நூல்களிடையே தெரியும் இடைவெளி தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அன்றைய சூழ்நிலைக்கு அவ்வகை பாவகை தேவைப்பட்டது. இன்றைய சூழ்நிலைக்கு இவ்வகைப் பாவகை தேவைப்படுகிறது. திருக்குறளை விளக்குவதற்குத் தெளிவுரைகள் தேவைப்பட்டன. அதேபோன்று புதுக்கவிதைகளுக்கும் தெளிவுரை எழுதவேண்டிய காலம் வரலாம். ஏனெனில் யாவும் மாற்றத்துக்குட்பட்டவையே. இதனைத்தான் மணிவாசகர்'மாற்றமாம் வையகம்' என்று சொன்னார்.

பழந்தமிழ் இலக்கியங்களில் உவமான உவமேயங்களும், அணிகளும் மறைந்திருந்து சுவையூட்டின. நவநாகரிக யுகத்தில் அவையாவும் தெட்டத் தெளிவாக வெளிக்காட்டி மிக இலகுவாக, நாம் 'நொடி அல்லது விடுகதை' எனச் சொல்வோமல்லவா? அவைபோன்று பாடல்களிலே பவனிவருவதைக் காணலாம். உதாரணமாகக் கீழ்வரும் கவிதை அமைந்துள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிஞ்சு வாய் அசைத்தபடியே பெருநிலப் பரப்பிலே குருவிக் குஞ்சுகள் வாய் நீட்ட ஊட்டல் செய்யும் தாய்ப் பறவையாய் சிறகுகளை நீவிச் சீர்செய்து நினைவுகளை மீட்டுகின்றேன்'

மண் என்ற மகுடத்தின் கீழ் ஒரு கவிதையும், மண்ணின் மதிப்பு என்ற தலைப்பில் இன்னுமொரு கவிதையும் படிப்பதற்குச் சுவைப்பனவாய் உள்ளன. ' மண் ஏழைகளின் கருப்பை, புல்லின் பூங்காவனம் எனக்கூறிக் கொண்டு சென்றே '

மிதிப்பவர்களைப் பார்த்தே
சிரித்து நிற்கும் சிம்மாசனம்
மண்ணாசை கொண்டவர்க்கு
மரணப் பொறி
பெண்ணுக்குப் பொறுமை சொல்லும்
பள்ளிப் பாடம்

மாறும் உலகத்தின் மந்திரக் கோல் எனக் கூறும் கவிஞர் தான் பிறந்து வாழ்ந்த மண்ணின் பெருமையை, அதன் மதிப்பை

'எங்கள் மண்ணிற்கு மதிப்பு
பல பில்லியன்கள்
ஐவகை நிலங்களும் அடங்கிய
ஒற்றை நிலம் என்பதால்
மாசற்ற குழந்தையின்
காற்று வழிக் கிராமம்' எனக் கூறுகிறார். அது இப்போது இல்லை.

அங்கே வாழ்க்கை இனித்தது. கலையும் கூத்தும் நிறைந்து கிடந்தது. ஆனால் இன்று

தலையிழந்த தென்னைகளும்
சஞ்சாரமில்லாத பாதைகளும்
இருட்டே ஆட்சி செய்யும்
இடிந்து போன கோபுரமும்..........
வாழ்விழந்து போன மனைகள்..........
மாறாத காயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி வடிந்தபடியே இருக்கும் உரிமைகளை இழந்து உணர்வுகளைத் தேடும் கிராமம்' என குமுறலுடன் காட்டுகிறார்.

நமது தேசமும், மக்களும் அனுபவித்த இன்னல்களின் தடங்களை ஒவ்வொரு கவிதையிலும் பதிவு செய்துள்ளார். இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்றால் கவிஞர் யோகானந்தன் தான் வாழ்ந்த காலத்தின் வாழ்வியலைத் தனது கவிதைகளில் வடித்தெடுத்துப் பதிந்துள்ளார். அத்தனை பதிவுகளும் இக்காலகட்டத்தின் வரலாறுகள். காலங்காட்டும் கண்ணாடிதான்.

கவிதை என்பது உணர்ச்சியின் துள்ளல். அந்த உணர்ச்சி துள்ளிப்பாய்ந்து வெளிவர ஒரு வடிவம் தேவை. அந்த ஒரு வடிவம் அழகாய் இருக்க வேண்டும். அதைப் பலமுறை சொல்லி அனுபவிக்க வேண்டும். சொல்லும்போது அல்லது நமது நாவழியே வரும்போது சுவையுடையதாய், ஓசை நயமுடையதாய் இருந்தால் கேட்போர், அதனைப் படிப்போர் இன்பம் அடைவர். இவ்வாறான ஒருவடிவம்தான் கவிதை. கவிதையில் கவித்துவமும், கதையும், விதையும் இருக்கவேண்டும் என்று கூறுவார்கள். கவிஞர் யோகானந்தன் அவர்களின் முதற்கவிதை நூலுக்கு அகில இலங்கைச் சாகித்ய மண்டலப் பரிசு கிடைத்தது. அந்தத் தரத்தினைத் தக்க வைக்கப்பதற்குக் கவிஞர் யோகானந்தன் இன்னும் பலநூல்களை எழுத வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே..........

1. காயப்பட்ட மனங்கள்
2. தாலாட்டு
3. மண்
4. அரசியல்
5. மிரட்டும் சந்தங்கள்
6. நிர்ப்பந்தங்கள்
7. விடியலைத்தேடி
8. மரங்கள்
9. கனவுகள் நிறம்மாற
10. மௌனம் காக்கிறேன்
11. துயரப்பகிர்வுகள்
12. அறுத்தெறிவதற்காய்
13. தொலைந்து போனவாழ்வு
14. அன்றொருநாள்
15. சொந்தங்கள்
16. திருமலை உறையும் கோணேசா...
17. நெஞ்சில் மோதி
18. மனமே
19. நினைவுகள்
20. மண்ணின் மதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. புதைந்துபோன மானுடம்

22. நிலவும் வானும்

23. பிஞ்சுவாய் அசைத்தபடியே

24. கடைசிக்கனவுகள்

25. என் நினைவுகள்

26. ஆய்வுக்குழாகளில்

27. என் மனவானில்

28. உன் மின்னல் புன்னகையில்

29. தாய்மை

30. வசந்தம் வருமா?

31. மனங்களில் ஏற்றி

32. நரம்பறுத்த வீணைகளாய்

33. தேர்தல்காலம்

34. திரைச்சேலைகளாய்

35. மனப்பொக்கிஷங்கள்

36. மழைக்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயப்பட்ட உள்ளங்கள்

தெருவோர மரங்கள் உதிர்த்த
இலைகள்போல்
என் உள்ளத்திலே
காய்ந்து கிடக்கும் நாளைய கனவுகள்
வயது முதிர்தலால் நீட்சிபெற்று
வாழ்க்கை கடந்து போகிறது
மலர்ச்சியில்லாத இளமையின்
சிறகொடிப்புக்கள்
தினம் தினம் காயப்பட்டு
கழிந்து போகும்

துருப்பிடித்த பாத்திரங்களாய்
மனித இதயங்கள்
மலினமடைந்து போகும்
வரண்டுபோன தேசத்தில்
காயப்பட்ட உள்ளங்கள்
கண்ணீர் சிந்திநிற்கும்
வயிற்றில் பூக்கும் பசிக்கோடுகள்
விண்மேகங்களாய்
உயர உயரச் செல்லும்
விலைபோகும் தலைமைகள்
உதிர்க்கும் சுயநலப் புன்னகைகள்
கண்ணீர் பிரவாகத்தோடு
விடைதெரியாமல்
கரைந்து போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

காட்டுவழி பிறந்தவனே
கார்த்திகைப்பூ தேரழகே
அகதிமகனாய் ஆனவனே
அமைதியாகக் கண்ணுறங்கு

கண்ணீரை துடைத்தபோது
மழைநீர் வந்தே நிரப்புதடா
எண்ணமெல்லாம் காய்ந்தவேளை
கண்மணியே ஏன் பிறந்தாய்

பாலூட்டிச் சீராட்ட
பாலுமில்லா வேளையிலே
நீயெழுந்து அழும்போது
இதயமெல்லாம் நொருங்குதடா

நுளம்புகள் உன்னைத் தீண்டும்போது
வலுவிழந்த கையாலே
உனைக் காத்து அணைந்தெடுப்பேன்
முத்தே என் ரெத்தினமே
முகம் பார்த்தே கண்ணுறங்கு

தாயாகக் காட்டுவதற்கும்
தழுவி உனை அணைப்பதற்கும்
மறைந்த கதைகள் சொல்வதற்கும்
மாற்றம்வரும் கண்மணியே கண்ணுறங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்

ஏழைகளின் கருப்பை
புற்களுக்குப் பூங்காவனம்
பூக்களுக்கோ மணமேடை
வசந்தத்தின் வாழ்த்துப்பா
இலைகள் சொரியும்
குப்பைத் தொட்டில்
தாய் உறவை உதறும் போது
தத்தெடுக்கும் காப்பகம்
அன்பு மனைவி பிணம் என்று
வெறுத்தொதுக்கும் போது
பாசமாய் அணைத்தெடுப்பது
பிறக்க வைத்து அழகுபார்க்கும்
புண்ணியத்தின் தாய்மடி
மனிதர்களின் தாலாட்டு
ஆள விரும்புபவனை விரட்டும்
விலைபோகாத மக்களையும்
ஆக்கம் செய்பவனை ஆதரிக்கும்
தெய்வத்தின் பாதம்
முயற்சியாளரின் கூடாரம்
சோம்பியிருப்பவனின் எதிரி
துரத்தியடிப்பவர்களை(க்)
கைகொடுத்துக்காக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய நண்பன்
மிதிப்பவர்களைப் பார்த்தே
சிரித்து நிற்கும் சிம்மாசனம்
மண்ணாசை கொண்டவர்க்கு
மரணப் பொறி
பெண்ணுக்குப் பொறுமை சொல்லும்
பள்ளிப்பாடம்
மாறும் உலகத்தின் மந்திரக்கோல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்

ஒன்று சேர்ந்தவர்கள்
மாறி மாறி (க்)
காலை வாரிடும்
விசித்திர விளையாட்டு
பறவைகள் பீச்சியடித்த
எச்சம் போலே –
எந்த இடத்திலும்
ஒட்டிக் கொள்ளும்
சாக்கடைச் சங்கதிகள்
முகத்திற்கெதிராய்
கொடிய வார்த்தைகள்
பேசியவர்களே
வாரி அணைத்தெடுக்கும்
வேடிக்கை வினோத நிகழ்ச்சி
கொள்கைகளையும்
உணர்வுகளையும்
அடைமானம் வைத்தே
உரத்து பேசியபடியே
நியாயம் கற்பிக்கும்
மானமில்லா உயிர்ப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காளர்களை ஏமாற்றி

தலை தடவியபடி

கால்களுக்கு

பொறி வைக்கும் கபட நாடகம்

கால்பிடித்தோ கைபிடித்தோ

ஈனச் செயல் செய்யும்

முதலீடு இல்லாத

மூலதனம்

ஏற்றியவர்களையே

மறந்து போகும்

விசித்திர கருவறுப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டும் சத்தங்கள்

வெளிச்சச் சூரியனை
விழுங்கிய இருமாப்பில்
விசுவாசத்தின்
நீட்சிப் பார்வைகளூடே
ஊர் நாய்களின்
மிரட்டும் சத்தங்கள்
மனித சஞ்சாரமற்ற
தெருக்களிலே –
பரட்டைத் தலைகளோடு
பறந்து திரியும்
கழுகுப் பறவைகள் -
இடிந்துபோன
வீட்டின் முற்றங்களில்
தலையிழந்த தென்னைகள்
யுத்தச்சகதியிலே
புதைந்து போன தேசங்களில்
முகவரியிழந்த மானுடங்கள்
நினைவுகளைக் கொத்தியபடியே
மன மரங்கொத்திகள்
அலகுகளாலே கொத்துகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு திசையில்

மகிழ்ச்சியான குடியிருப்புக்கள்

மறு திசையிலோ

கண்ணீரில்லா அழுகைகள்

காலத்தை நொந்தபடியே

மானுட நடைப்பிணங்கள்

நம்பிக்கை வெளிச்சத்தில்

தேசம் தேடும் மின்மினிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ப்பந்தங்கள்

பறவை போல்
எதிர்கால நீட்சியில்
விரிய வேண்டிய என்வாழ்வு
சப்பென்று போய்விட்டது
நான் மனிதனென்பதையும்
உயிரின் உயிர்ப்புக்களையும்
இளமையின் ஊசலையும்
ஊதிர்ந்து விழும் -
எண்ண நினைவுகளையும்
அதிக ரணங்களின்
வடுக்களையும்
நினைவுகளூடே
நிரூபிக்க முற்படுகிறேன்
காலாவதியாய் (ப்)
போன ஆசைகள் -
கனவுகளில் கூட
அகப்படாத நனவுகள்
பட்ட மரத்திலே
குந்தியிருக்கும் -
நினைவுப் பறவையாய்
வேற்றுக் கிரகத்தில்
சஞ்சாரம் செய்கிறேன்
இலத்திரனியல் கழிவுகளாய்
குப்பை மேடுகளிலே
வீழ்ந்து கிடக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத் தேடி

விளக்கைக் கையிலேந்தி
விடியலைத் தேடுகின்றேன்
விடியாதபடியே உலகம்
முழு இருளின் மடியிலே
மூழ்கிக்கிடக்கின்றது
அடிமைச் சமூகமாய்
மொழி உச்சரிக்கப்படுகின்றது
புவிதனில் மனித நேயம்
மரணித்துக் கிடக்கின்றது
மல்லிகை நறுமணத்திற்காய்
மானுடம் தவம் கிடக்கின்றது
வாடிப்போன இதயங்களுக்கு
நீர் தெளித்து ஆறுதல்ப்படுத்த
கைகளில் விரல்களில்லை
பண்பான வாழ்வைத்தேடி
வலுவிழந்தவர்கள் ஏராளம்
நிழலின் நிம்மதி கூட
நின்று நிலைக்கவில்லை
சூரியனின் வருகைக்காய் (த்)
சுழன்றபடியே முகம் நீட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தபோதில்

காய் கதிரோன்

தடம் மாறி மறைந்து போனான்

உதயமுமின்றி அஸ்தமனமுமிழந்து

கூண்டுக்கிளிகளாய் -

சிறகொடிந்து வாடுகின்றோம்

தூக்கி எழுந்து பறக்க முடியாதபடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள்

மரம் மண்ணின் பிணைப்பு
மனிதனின் மறு பிறப்பு
தொட்டில் சுகம் தேடும்
கிளிகளின் கூடாரம்
மீனவனுக்கு வாழ்வாதாரம்
சிற்பனுக்கு விளையாட்டுப் பொருள்
கடத்தல்காரனுக்கு காசுமழை
மருத்துவனுக்கு மூலிகைத்தோட்டம்
காதலுக்குச் சொர்க்கம்
குரங்குகளுக்கு தொங்குமரம்
பறவைகளுக்கு சரணாலயம்
பனிக்கட்டிகளுக்கு சறுக்குமரம்
சீனர்களுக்கு உணவுக்கோல்
சிறுவர்களுக்கோ விளையாட்டு
திருமணத்திற்கு அலங்காரம்
இல்லத்திற்கு முகட்டுவளை
நிழல் கொடுக்கும் வள்ளல்
நீந்திச் செல்லும் தெப்பம்
மண்ணில் பிறந்தாலும்
விண்ணை நோக்கும் நட்சத்திரம்
துன்பத்தால் துவண்டபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப் பூப்பூக்கும் விருட்சம்
தின்னக் காய்கள் தரும் வள்ளல்
தேனீக்களின் பாசறை
மனிதனை மயக்கும் போதைமரம்
புத்தன் ஞானம்பெற்ற போதிமரம்
மின்சார ஒளியேற்றும் மின்கம்பம்
இசைமீட்டும் தோற்கருவி
கானம் தரும் இதயவீணை
காவலுக்கு நற்காப்பரன்
பசித்த உள்ளத்திற்கு குளிர்நிலவு
பாடையிலே செல்வோர்க்கு காவுமரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் நிறம்மாற.......

நீ விரித்த வலையில்
நான் விழுந்துவிட்டேன்
எப்போதோ


கைகளில் ரோஜா மலரோடு
கண்களில் கண்ணீர்மல்க
நீயோ வடக்கிலிருக்கிறாய்
நானோ இணையமுடியாதபடி
கிழக்கில் இருக்கின்றேன்
உனக்கும் சேர்த்து நானே
அழுது வடிக்கின்றேன்

அர்த்தப் பார்வைகள்
நோக்கிக் கொள்ளலாம்
கை கோர்த்தபடியே
நிலுவிலும் பேசலாம்
நடந்தவைகள் யாவும்
கனவுகளாய் நிறம்மாற
உன் பிரிவோடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாழ்கின்றேன்
குருதி ஊற்றிலே
பிசுபிசுக்கக் காலைவைத்துவிட்டு
மயானப்பேய் போல்
விரல் இடுக்குகளிலும்
உள்ளைத் தேடுகின்றேன்
காதல் ஒரு சூறாவளி
மரங்களை அசைக்கும்
மலர்களையும் உதிர்க்கும்
நீயும் நானும் இணையும் போது
உலகம் பலவற்றை இழந்திருக்கும்
ஆனால்
நாம் வரலாறு இழந்திருப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் காக்கிறேன்

களப்பலி கொண்ட கிராமம்
கண்முன்னே கொள்ளைபோகிறது
கண்களை இறுக்கிமூடியபடியே
மௌனம் காக்கிறேன் நான்
காளிதேவியின் கனவுக் கூடாரம்
கலைந்தபடியே கிடக்கிறது
வீணை நரம்புகள் விம்மியபடியே
நெற்றிப் புருவங்கள் சுழிக்கின்றன
பால்நிலவு அங்கு எறிப்பதில்லை
காலடி விளக்குகள் ஒளிர்வதில்லை
சதங்கையின் சங்கீதம் பிறப்பதில்லை
குந்தியிருந்தபடியே –
காற்றிலே கரைந்து போகிறேன்
வாழ்விடம் முழுவதும் வலிய இருள்
நெஞ்சங்கள் நிறைந்த கீறல்கள்
கட்டி கொண்ட புண்களாய்
இதயங்கள் கொதிப்படையும்
தாமரைக் குளக்காற்றோ
சுட்டெரிக்கும் சூரியனாய்
மண்ணில் பட்டு மரத்துப்போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் நடைகளின் கண்களில்
காய்ந்துபோன கண்ணீர்த்துளிகள்
சொந்தங்களை தேடியதனால்
சோர்ந்துபோன நடைப்பவனி
இரைந்து கொண்டிருந்த கடல்
மௌனம் காத்து அடங்கிப் போகிறது
மீண்டும் ஒரு சுனாமிக்காய்......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரப் பகிர்வுகள்

துயரங்கள் சொல்லும்
பாடல்களும் கதைகளும்
எனக்கு பிடித்திருந்தன
இன்பங்கள் தரும் தேனைவிட
துன்பங்கள் தரும் கசப்பு
மனத்திற்கு இதமாகவிருந்தது
துயரம் கிடைப்பது சுலபம்
சில முட்களாய் தைக்கின்றன
சில துயரங்கள் ஆணிகளாய்
இதயத்தை அறைகின்றன
கோடிகளின் துயரங்கள்
வாடிய மாலையாகின்றன
ஏழையின் இன்பங்களை வாங்கி
முகம் பார்த்து இரசிப்பதைவிட
துயரத்தை வாங்கியபடியே
அவனுக்காய் அழுவதில் ஆனந்தம்
தூறல்கள் தொடங்கிய படியே
பெரும் புயல் மழையாய்
இதயங்கள் வடிந்து கொண்டிருக்கின்றன
துயரங்களைப் பகிர்ந்து கொள்ள
கூட்டம் என்னை நோக்கிய படியே
மெல்ல மெல்ல அசைகின்றது
வியப்பால் உறைந்துபோனேன்
உலகம் என் முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எதிராய் இன்பம் தேடியவன்
வாழ்வில் தோற்றுப்போய்
மண்டியிட்டபடியே கிடக்கின்றான்
சோகமாய் உறைந்த நிலையில்
நான் மட்டும் இன்ப இறுமாப்பில்
குதூகலித்துக் கொண்டிருக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறுத்தெறிவதற்காய்...

கொல்லைப் பக்கமாய் (க்)
சோகக்காற்று
சோம்பலை நீக்கியபடியே
உருண்டு வருகின்றது
கணவனின் பாடையருகே
கண்மணியாள் கதறியழ
ஊரெல்லாம் ஒன்றுகூடி
மனைவிக்குப் பொட்டிட்டு
பூவைத்து வேடிக்கை பார்க்கிறது
சரித்திரத்தின்
சாட்சியாக இருக்கும்
மந்திரம் சொல்லி (க்)
கட்டிய தாலியை
அறுத்தெறிவதற்காய் (க்)
அனைவரும் உற்றுப் பார்க்கிறார்கள்
திசை எதுவென்று
அவள் அறிய முன்னமே
தாலி கழன்று
பொட்டும் மறைந்து போகிறது
அவள் சூடிய மல்லிகைப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எப்பொழுதும்
முட்புதர்களிலே பூக்கும்
நிலவற்ற வானமாய்
நினைவுகளை அடக்கிய படியே
பொட்டிழந்த விதவையாய்
வாழ்வு கழிந்து போகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன வாழ்வு

இயற்கையை அடக்கும்
வல்லமை படைத்தவர்கள்
தமது வாழ்நாளிலே
விடியலுக்காய்...............
காத்திருக்கிறார்கள்
விண்ணைக் கையால் தொடும்
வல்லமை கொண்ட தமிழர்
வதங்கி வாடியபடியே
இதயத்தைக் கூட தாங்கமுடியாது
அகதி முகாமிலே
புழுதியோடு புழுதியாய்
முகவரி தொலைந்து கிடக்கிறார்கள்
பள்ளியிலும் பாதையிலும்
புள்ளி மான்களாய்த் துள்ளிய
மழலைக் கூட்டம்
பசியின் கொடிய வக்கிரத்தால்
புழுவைப் போல
தெருவெங்கும் நெளிகிறார்கள்
நம்பிக்கையைத் தொலைத்தபடி
ஒளியிழந்த குருட்டு விழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறட்சி முகத்திலே
வெறும் புள்ளிகளாய்....................
பாலைவனப் பார்வைகள்
வேலைக்குச் சென்றவர்கள்
வேரறுந்த விருட்சங்களாய்
குடும்ப ஆணிவேர்களை
உசுப்பிய படியே
உறங்கிப் போகிறார்கள்
தேசக் கொடிகள் பறக்கும் போது
தொப்பூழ்க் கொடிகள்
அறுந்து தொலைகின்றன
சமுதாயச் சந்தையிலே
இருப்பவர்கள் எல்லாம் மண்ணைத் தொலைத்தவர்கள்
உதய காலத்திலே
இதயத்தை இறுக்கிய படியே
முழு நீளக் கனவுகள்
தொலைந்த வாழ்வை
தேடிய படியே மீண்டு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றொரு நாள்

அன்றொரு நாள்
விடியற் பொழுதில்
அகதிமுகாம் நோக்கி
என் கால்களை
நகர்த்துகின்றேன்
கண்விழித்த குழந்தைகள்
கல்லறை முன்னால்
ஊர்ந்து திரிகின்றார்கள்
சொத்து சுகம் என
வாழ்ந்த மக்கட் கூட்டம்
பாதை தெரியாமல்
மண்ணிலே புரள்கிறது
காலம் அவர்களை
கல்லறை வரை விரட்டியிருக்கிறது
கோவிலைச் சுற்றியே
வாழ்ந்த கூட்டம்
சகுனம் பார்த்தே
பழக்கப் பட்டவர்கள்
வாழ்வைத் தொலைத்த படியே
தலை குனிந்து நிற்கின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்காய் மன்றாடும்

அடிமைத்தனம் எத்தனை நாளோ?

காற்றடித்து ஓய்ந்து போன

பூமியெங்கும்

உயிர்ச் சருகுகள்

சத்தமில்லாமல்

உதிர்ந்து போகின்றன

மீண்டும் முளைப்பதற்காய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தங்கள்

சொந்தங்கள் பிரிந்ததாலே
சோகங்கள் வளர்ந்ததேனோ
தீயிலே நீந்தி வந்தோம்
தெரிகின்ற நரம்பு வீங்க

வெள்ளி நிலா பால் வெளியில்
கொள்ளையில்லா ஆசையாலே
புரிந்துணர்வே கரைந்தொழிந்த மாலை வேளை
தலை நிமிர தாய் குளிர தமிழைக் கேட்டோம்

வட்டமிடும் கழுகுகளே தினமும் எம்மை
கொத்தி விட்டு ஏப்பம் விட்ட சேதி என்ன
பட்ட கனவுகள் கலைந்து போக
கொள் பசியைத் தீர்க்கின்ற பாவியானோம்

நீல மயிலே உந்தன் கால்கள் முடங்கிட
தத்துவமே பேசியெங்கும்
பியத்தெடுத்த உணர்வைக் கொல்ல
பேய்கள் எங்கும் சிரித்து மகிழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை உறையும் கோணேசா

திருமலை உறையும் கோணேசா
தினம் தினம் தொழுவேன் வாநீசா
பாரினில் நிலையாகி நின்றவனே
பாவங்கள் வல்வினை வென்றவனே
(திருமலை உறையும்)

மானினம் துள்ளும் அருளுனதே
மாதுமையோடே அமர்ந்தவனே
குரைகடலோதம் நிறைந்தவனே
சிதம்பரத்தே நடம் புரிந்தவனே
(திருமலை உறையும்)

இராவணன் வீற்றிருக்கும் கன்னியாவிலே
இமையவள் சேர்ந்தோங்கும் சோலையிலே
மாமழை நதியாடி உளம் சிறக்க – நிதம்
தாவியே வந்துமை மகிழ்ந்தவனே
(திருமலை உறையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் மோதி

நெஞ்சில் மோதி நீண்டு போகும்
தேசமெங்கும் வளர்ந்த காதல்
பஞ்சாய்ப் போகும் காலமேகம்
பறந்து சென்று மறைந்ததேனோ
(நெஞ்சில் மோதி)

நந்தவனத்துக் குயில்கள் போலே
நலன்கள் யாவும் இளமையோடே
பொட்டு வைத்த நிலவின் சுழியாய்
நட்டு வைத்த இளமைக் கோலம்
(நெஞ்சில் மோதி)

அந்தரத்தே மேடை போட்டே
சுந்தரத்துத் தேன் குளத்தில்
இதயம் ஒன்றாய் இணைந்த போதே
மந்திரத்தால் காதல் மொழி பேசி நின்றோம்
(நெஞ்சில் மோதி)

சந்தனத்துக் குளிரின் ஓடையிலே
சலசலக்கும் மூங்கில் இலையாய்
நினைவு என்றும் துளிர்ந்து நிற்கும்
தெரிகின்ற விழியசைவில் விரிகின்ற பார்வையிலே
(நெஞ்சில் மோதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே.........

இருண்டு போய்க் கிடக்கும் வீதியெங்கும்
திசைமுகம் நோக்கிய படியே கிராமங்கள்
இருகரம் ஏந்திய படியே விழித்திருக்க
மனமே நீ மட்டும் கலங்காதிருக்கிறாய்
வாசலிலே நின்று தினமும்
வரவேற்புப் பாடும் மனநிலையில் நாமில்லை

மயிலும் குயிலும் மகிழ்ந்திருந்த தேசத்தில்
பருக்கைகளுக்கு ஆலாய்ப் பறக்கும்
காக்காய்க் கூட்டங்களும்
நக்கிச் சண்டை போடும் நாய்களும்
கீரியின் உடல் மிருதுவாய்
இடையிடையே மனமே!
நீ மட்டுமே இன்பமாய் குதூகலிக்கிறாய்

வறுமை வெக்கை சூழ்ந்த
கருவறையிலே குழந்தைகள்
கருத்தரித்த படியே
முடங்கிக் கிடக்கிறார்கள்
தலையிழந்த தென்னைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவிய படியே காற்று உயிர்க்கிறது
சருகு உதிர்ந்த நினைவுகளை
சரித்திரமாய்க் கிளறிப்பார்
உன் பந்தம் குறைந்திருந்தால்
மனமே உயிரோடு விரைந்து வா
போக்கிழந்த மனித வாழ்வில்
புழுதியை வாரியிறைத்த படியே
உறவுகளின் தடயமிருந்தால் தேடிவா
இல்லையென்றால் காலத்தைத் தேடு............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்

உறவுகளைத் தேடிய நான்
நினைவுகளோடு
மௌனமாய் நிற்கிறேன்
அவன் என்னைப் பார்க்கவில்லை
அவன் என்னைத் தீண்ட முடியாதபடி
முள்வேலி தடுக்கின்றது
அவன் தலை நிமிரவில்லை
மணலில் ஏதோ எழுதுகிறான்
“என் பிள்ளைகள் நலமா?“
அவர்கள் மடிந்து விட்டார்கள்
அவர்களுடைய புதை குழியின் மேல்
கோரைப் புற்கள் முளைத்துள்ளன
அவன் மௌனித்துப் போனான்
என் தாயும் இறந்து விட்டாள்
வார்த்தைகளால் காட்டுகின்றேன்
வாலறுந்து பட்ட வாழ்வை
நினைத்த படியே மௌனமாகின்றான்
பக்கத்து மரத்திலிருந்த படியே
சிட்டுக் குருவி தன் சோகம் சொல்கிறது
துக்கம் என்பது மனிதனுள் ஒரு கூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கத்திற்குள்ளே நானும் ஒரு கூறு
பொலிவிழந்த முகத்தோடு
மௌனத்திற்குள் அவன்
நின்ற படி பெருமூச்சு விடுகிறான்
'என் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும்'
அவன் தன்னுள் முணுமுணுக்கின்றான்
நான் சொல்லுகின்றேன்
அவர்களை யாராலும் தேட முடியாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மண்ணின் மதிப்பு

எங்கள் மண்ணிற்கு மதிப்பு
பல பில்லியன்கள்
ஐவகை நிலங்களும் அடங்கிய
ஒற்றை நிலம் என்பதால்
மாசற்ற குழந்தையின்
காற்று வழிக் கிராமம்
பல்தேச மொழியாளர்களின்
இலட்சியக் கிராமம்
சம்பூரணமாய் அமைந்து
கலையும் - கூத்தும்
நிறைந்த கிராமம்
தலையிழந்த தென்னைகளும்
சஞ்சாரமில்லாத பாதைகளும்
இருட்டே ஆட்சி செய்யும்
இடிந்து போன கோபுரமும்
நிறைந்த கிராமம்
குளக் கோட்ட மன்னனின்
வம்சக் குடிகள்
வாழ்விழந்து போன மனைகள்
சிதைந்த கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் என்றும்
ஏக்கங்களாய்
நிறைவேறாத ஆசைகள்
நொடிக்கு நொடியாய்
கலைந்து போகும் கிராமம்
மண்ணின் கொப்புளங்களாய்
மாறாத காயங்கள்
குருதி வடிந்த படியே இருக்கும்
உரிமைகளை இழந்து
உணர்வுகளைத் தேடும் கிராமம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைந்து போன மானுடம்

இரவின் வேதனைகள்
அசையாத காயங்கள்
வதைபடு முகாம்களில்
கல்லாய்ப் போன துன்பங்கள்
குருதி மணக்கும் பூமியில்
புதைந்து போன மானுடம்
விழுதிலிருந்து விழும் விதைகளே
என் வழிகாட்டிப் பறவைகளே
குறுகிப் போன இதயத்தை மன்னியுங்கள்
நெருப்பைத் தொடுகின்றேன்
தென்றலாய் நினைக்கின்றேன்
கரடு முரடான பாதைப் பயணங்கள்
கண்ணுக் கெட்டும் தூரத்தே
விடியல் கண்முன்னே தெரிகிறதே
பச்சையமற்ற உடற் குழந்தைகள்
பார்வையிழந்து போன பூமித்தாய்
நிட்சயமில்லாத வாழ்க்கை ஓடு பாதைகள்
இறுதி வரை வாழ்ந்திருப்போம்
உறுதியிலே திளைத்தவர்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவும் – வானும்

எப்பொழுதோ ஒரு தடவை
அதிசயத்தக்கதாய்
எதிரெதிராக இருந்து கொண்டே
ரயிலில் பயணிக்கின்றோம்
முகம் இறுகிப்போய்
ஒதுங்கிச் செல்கிறது காதல்
இருந்த போதும்
நம்முடைய ஒவ்வொரு சந்திப்பிலும்
விரோதங்களை விடுத்து
புன்னகைக்க முயற்சி செய்து
தோற்றுக் கொண்டேயிருக்கிறோம்
நமது பழைய நட்பை
மறந்து போய்
செத்துக் கொண்டிருக்கிறோம்
என்பது தான்
ஆழ் மனதின் கவலையெல்லாம்
நிலவும் - வானும்
தமக்குள்ளே என்றும்
முட்டி மோதியது கிடையாது
புன்னகைத்த படியே
பூச்சிந்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு வாய் அசைத்த படியே

பிஞ்சு வாய் அசைத்த படியே
பெருநிலப் பரப்பிலே
குருவிக் குஞ்சுகள் வாய் நீட்ட
ஊட்டல் செய்யும் தாய்ப் பறவையாய்
சிறகுகளை நீவிச்சீர் செய்து
நினைவுகளை மீட்டுகின்றேன்

கோடை வெளிப் பயணத்தில்
வற்றிப் போன வாழ்விடம் தேடி
வாயுலர்ந்து நிற்கின்றேன்
கைதிறந்து உதவுங்கள்
நாளைக்காய் காத்திருந்து
முளை கருகிப்போய்

முடிவிழந்து தவிக்கின்றேன்
கிழித்துப் போட்ட வாழைச்சருகாய்
வாடி வதங்கி மனம் மெலிந்து
முளைத் திறமற்ற வித்தாய்
முடிவின்றியே கிடக்கின்றேன்
பருக்கைத் தீனிற்காய்
ஆலாய்ப் பறந்தபடி
கைகளை நீட்டியபடியே
வெட்கமிழந்து தவிக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிக் கனவுகள்

புதுமைகளின்
மார்புகளிலிருந்து
நஞ்சு வடிகிறது
இறைச்சிக் கடைகளில்
தொங்கும் கொக்கிகளில்
இரத்தம் உறையாத
மனித இதயங்கள்
தொங்கி அசைகின்றன
பிணங்களைச் சுவைத்து
எச்சில் வடியும் நாக்குகளில்
பூமி மட்டும் புதைந்துபோயுள்ளது
இரவும் - பகலுமாய் அவனுக்காய்
கண்கள் வடிக்கும் கண்ணீரில்
வான மண்டலம் மூழ்கிவிட்டது
பெண்குறியும் கருவறையுமின்றி
சுயத்தில் வெளிப்படும் சுக்கிலம்
ஒரு மலரின்மேல் விழுகின்றது
மலர்களே இனிமேல்
மனிதனைப் பிறப்பிக்கும்
மலர்களிலே மனிதன் பூப்பான்
நம்பிக்கை மட்டும் மாறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகள்

அவன் மௌனமாய்(க்)
கண்களை மூடுகின்றான்.

வெண்பனி மூட்டங்கள்
விரைந்தோடுகின்றன
நிரவிப் பரவும் குளிரிலே
மலை இடுக்குகள்
செய்வதறியாது திகைக்கின்றன

பனித்துளிகளைத் தாங்கிய படியே
ரோஜா இதழ்கள் நனைகின்றன
தனிமையை நினைக்கையில்
அர்த்தங்கள் முகிழ்கின்றன
விரவிப் படரும் கருமையிலே
இனிய மாலை மறைகிறது

கண்ணீர் மழையில் தினம் தினம் குளித்து
விறைத்துப் போன இதயங்களாய்
என் நினைவுகள்
மண்டைக் குழியிலிருந்தவாறே
மரம் கொத்தியாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக் குழாய்களில்

விஞ்ஞான வெளிச்சத்தில்
உலகம் தினம் தினம் விடிகிறது
அண்ட வெளியில்
மின்னல் கீற்றுக்களாய் மாற்றங்கள்
முகத்தை முகம் பார்த்துப் பேச்சுக்கள்
முடிவில்லாது தொடர்கின்றன

ஆய்வுக் குழாய்களில்
அன்பைப் பிறப்பிக்க முடியவில்லை
மரபணுச் சோதனைகளும்
மருத்துவச் சாதனைகளும்
மாண்டு விட்ட மனிதத்தை
உயிர்ப்பிக்கத் தெரியவில்லை
எங்கள் அறிவையெல்லாம்
அவஸ்தைகளாக்கிய படியே
கால முட்கள் நகர்கின்றன

கூட்டுப்புழுக்களாகிய படியே
வாழ்வு கழிந்து போகின்றது
நெஞ்சுக் குழியிலிருந்த படியே
வார்த்தைகள் முடிந்து போகின்றன
உழுத்துப் போன இதயங்களில்
தொங்கிய படியே பாசங்கள்
விஞ்ஞானச் சூட்டில் கூட
இதயம் கூட மாறவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனவானில்.....

என் மனவானிலே
நம்பிக்கை
நட்சத்திரங்கள் பூப்பதில்லை
மாற்றத்திற்காய்
துயரப்பனித்துளிகள்
போர்வையாகின்றன.


நீ என்னைவிட்டு(ப்)
பிரிந்து சென்றபோதும்
கடந்தகால
சுவாசக்காற்றுக்கள்
என் நரம்புகளிலே பட்டு
உணர்வுகளை
சூடாக்குகின்றன.

சுகமான கனவுகள்
போர்வைக்குள் உறங்கிய
என் ஏக்கங்களாய்
நம்பிக்கைப் பூக்களை
வெளியெங்கும்
சிந்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகள் எழுதும்
பள்ளிப் பாடங்களாய்
கண்ணீர் சிந்தியபடியே
சுவரில்லாத சித்திரங்களாய்
கழிந்துபோகவே
உடல் சிதைந்து போகிறது
கணப்பொழுதுகளில்
நான் மாறிக்கொண்டிருக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் மின்னல் புன்னகையில்...

காதல் வார்த்தையின்
அர்த்தம் புரியாத நான்
உன் மின்னல் புன்னகையில்
முகமிழந்து தவித்தேன்
உன் விரல்களிலிருந்த
மின்காந்த அலைகளை
பரிசத்தால் அறிந்து கொண்டேன்

பழைய சிதைந்த கனவைப்போல்
நீயோ வீதிவழி நடந்தாய்
வானத்தை வாசித்தபடி நான் நிற்க
மேலாடை மூடிய தேனோடையாக
நிலாவூர்வலம் நடத்துகின்றாய்
இதயத்தில் தோன்றிய லப்டப் ‘ஒலி’
மறைந்து போவதை உணர்ந்தேன்
உருவமில்லாமல் உருண்டையொன்று
உருளுவதைக் கண்டேன்

புல்லில் ஒட்டிய பனித்துளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் காய்ந்திருந்தேன்
கசந்த நினைவுகள்
காணாது போய்
புதிய வசந்தத்தின் நீட்சியாய்
நெஞ்சுருகிப் போனேன்
இரவின் மோகச்சுமைகள்
எம்மை நெருடிவரும் வேளை
பார்வைகளாலே கணப்பொழுதில்
உறங்கிப்போனோம்
விழித்தெழ முடியாமல்
மீண்டும் கண்களைத் திறந்தபடி
பார்வைஜாலம் செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

நான் உன் மடியிலிருந்து
கைகளுக்குள் விழுந்தேன்
கொடிய வேதனை சுமந்த நீயோ
நிமிர்ந்து பார்த்தபடி
மௌனப் புன்னகை பூத்தாய்
உன் உள்ளத்தின் ஓரத்தில்
கவலையும் படர்ந்திருந்தது

என்னை ஆண்டவன்
பறித்தெடுத்து விடுவானோ
என்ற அச்சம் முழுமையாய் (த்)
உன்னைத் தொற்றிக் கொண்டது
உறவுகளெல்லாம் கூடி
சந்தோஷம் கொண்டாடியபோது
முதல்முதலாய்
மூச்சை இழுத்தேன் நான்
மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தாய்

என்னையே பார்த்தபடி
உஷ்ணப் பெருமூச்சு விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மையின் மகத்துவத்தை
முதல்முதலாய் உணர்ந்து கொண்டேன்
வீரப் பாலூட்டிய படியே
உலகிற்காய் அறிமுகம் செய்தாய்
ஈக்களிடமிருந்து காத்து
நுளம்பை விரட்டியவாறு
வலைகொண்டு மூடியபடி
வீரப் புன்னகை சிந்தினாய்
தாயைக்காக்கும் மகனாக
அப்பொழுதே எண்ணிக்கொண்டாய்
மண்ணில் முகிழ்ந்த
இரத்தினமாய் பாதுகாத்தாய்

கண்ணை மூடியபடியும்
கைகளைப் பொத்தியபடியும்
முந்திரி வித்தாய்
சுருண்டு கிடந்தேன்
கொப்பூழ்கொடி
பற்றி இழுக்க
என்னை மறந்தே தூங்கியிருந்தேன்
விடியலுக்காய்
பூபாளம் பாடுவதற்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம் வருமா?

வாழ்க்கை
வசந்தமாகுமென்று
வாசல்வரை
காத்திருந்தேன்
விரைந்து வந்து
மணம் செய்வதாய்
மண்டியிட்டுச் சொன்னான்
உற்றார் வெறுத்தொதுக்க
ஊரார் கிசுகிசுக்க
வசந்தத்தை இழந்தேன்
வாழ்க்கை வசந்தமாகுமென்று

பனிபடர்ந்த நாட்டிலிருந்து
அதிர்ச்சிச் செய்தி வந்தது
அவன் புதுத்தென்றலை
அரவணைத்துக் கொண்டதாக
பதறிப் போய்
உண்மை தேடியபடியே
உட்கார்ந்து கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமையாக

காத்துக்காத்து

ஏமாந்த கொக்காய்

இதயத்தில் துளிர்த்த


உயிர்ப்பும் மறைந்துபோக

நூலறுந்த காற்றாடியாய்

வாழ்வு தொலைந்தது

வசந்தம் வருமா?

மீண்டுமொருமுறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் ஏற்றி

வாழ்க்கை விசித்திரமானது
வாழும் பொருளெல்லாம்
மௌனமாக ஆராதிக்கப்படுகின்றன.
ஓடிவரும் நதியை
துரத்திச் செல்லும் மேக மூட்டங்களை
குதித்தோடும் மான்கூட்டங்களை
யாருமே விமர்சனம் செய்வதில்லை
முகிழ்ந்துவரும் கலைஉணர்வால்
மனங்களில் ஏற்றி
வாழ்த்தி நிற்கின்றோம்

வேலை தேடிவரும் இளைஞர்களை
கண்களில் விழும் தூசிகளாய்
கல்லூரிகள் பிரசவிக்கின்றன.
இளைஞர்களும் தாய்நாட்டிற்காய்
கனவு காண்பது கிடையாது
உறவுகளின் பாசங்களை
உணர்வதற்கு அவகாசமில்லை
உஷ்ணப் பேச்சுக்களுடனே
காலங்கள் விடிந்தபடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வைத் துளிகளையே
தினம் தினம் வெளிவிடுகின்றன.
அன்பான வார்த்தைகள் சேரும்போது
கருத்துக்கள் கூட கருத்தரிக்கும்
நதியும் கடலும் சேரும் போதுதான்
புத்தெளிர்ச்சி பிறக்கும்
பூவோடு நாரும் சேரும் போதுதான்
புதுமைபிறந்து மணம் வீசும்
மௌனத்தை விட இப்பூமியில்
வலிமையுள்ளவை கிடையாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரம்பறுந்த் வீணைகளாய்

நூற்றாண்டுக் கனவுகளை
சுமந்தபடியே...
மானுட வாழ்வு கழிகிறது

உதிரம் வடிய வடிய
கழுத்தறுந்த சேவல்களாய்
நெஞ்சச் சுமைகளோடு
வெம்மைக் கொப்புளங்கள்
உடலெங்கும் பூக்கும்

மண்ணில் பிறந்த மனிதன்
விதைந்த முட்களில்
செங்குருதி சொரிகிறான்
ஊட்டமில்லா உணவுகள்
புலன் வழிக் குறைபாடுகளாய்
ஈனப் பிறப்பாக்கிய படியே
வெளியே தள்ளும்

இலையுதிர்கால மண்ணில்
உதிரும் சருகுகளாய்
நிலைத்திருக்க நிலமில்லாமல்
பண்ணிசைக்க முடியாதபடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பறுந்த வீணைகளாய்
ஒலியிழந்து போனோம்.

புதிய நூற்றாண்டு பிறந்தும்
மனிதனிடமிருந்தும் உறுப்புகளுக்கு
விடுதலை இல்லை
உள்ளுணர்வுகளை விரட்டியபடியே
வாழ்வு கழிகின்றது

வாழ்க்கை மகத்தானதுதான்
அதைத் தவறிவிடும் போது
சுமையாக மாறி
பெரும் மயக்கத்தையே தந்துவிடும்
உலகெங்கும் அறிவொளி பரப்பும்
மனித குலமெல்லாம்
ஒற்றுமை இழந்தவராய்
மண்ணிலே புதையுண்டனர்
இரத்த வாடை மணம் வீச
இரத்தின ஆசனத்திலே
அதிகாரம் குடியிருக்கிறது
எண்ணக் குழியிலிருந்து
துயரமானது புறப்பட்டு
இராமபாணமாய்ச் சீறுகிறது
இதயச் சுமைகள்
இங்கிருந்தே பிறக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலம்

உணர்வுகள்
பிரசவமாகுமுன்னே
குறைப்பிரசவங்களாய்
தேய்ந்து போகும்
அரசியல் தூண்டில்களில்
வாக்காள மீன்கள்
வசமாய் சிக்கிக் கொள்ளும்
கழற்ற முடியாதபடி

தேர்தல் முடிவடைந்த பின்
பட்டினத்தார் ஞானமாய்
சுடலை ஞானம் பிறப்பெடுக்கும்
அதுகூட மறுதேர்தல் வரும்வரை
ஏமாந்த கொக்காய் (த்)
தவமிருக்கும்

உறவுகளைத் தொலைத்த
வலிமாறும் முன்னமே
எங்கள் எதிர்கால நீட்சி
ஏகாந்தத் தீயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாய் எரிகிறது

புதுப்புது விடயங்கள்

உலகிலே

தினம் தினம் பிறப்பெடுத்தாலும்

நூற்றாண்டின் மாற்றம்

முளைத்தெழும் வரை


மனித வாழ்வு

தடம் மாறிப் போகாத

பாலைவனம்தான்

பயணங்களோ

நீண்டவைதான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைச் சேலைகளாய்......

கவலைகளெல்லாம்
என்னை(த்)
துரத்திவருகின்றன.
எல்லாக் குற்றச்சாட்டுக்களும்
என்மேலே
செந்நாக்கை நீட்டி
பரிகாசம் செய்கின்றன.
முக்காடு போட்டபடி
உண்மை மாத்திரம்
உட்கார்ந்திருக்கின்றது.

காட்சிப் பொருட்களாகி
கொலுப்பொம்மைகள்
வாங்குவாரின்றி(க்)
கிடக்கின்றன
அப்படி வாங்கவருபவர்கள்
வாயிலிலே தொங்கும்
திரைச்சேலைகளாய்
தொலைவிலே நிறுத்தி
அழகு பார்க்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனச்சந்தையிலே
மலிவான பொருளாகி
தீண்டாமல் கிடக்கின்றேன்.
இளமையைத் தொலைத்து
பூத்து நிற்கும் எனக்கு
தொடரும் பூக்கள்
நெருப்பாகவே
மலர்ந்து போகட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப் பொக்கிஷங்கள்

கனவுகள் சுமக்கும்
கருவறை கிடைத்தது
காதலின் சுகத்தை
அணைத்த படியே
நகக் குறிகள்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
தென்பட்டன

மாலை மயங்கி வரும்வேளை
புதையல் தேடியவனாய்
பூமியின் மடிதேடுகின்றேன்
மனப் பொக்கிஷத்தை (க்)
கண்டு பிடிக்க நினைத்து
உன்னையே எதிர்பார்த்து
காத்துக் கிடக்கின்றேன்
விசித்திரப்பிறப்பாக்கி
நீயோ....

என்னை அவ்வப்போது
உன் நினைவுப் பெட்டக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கதிகளிலிருந்து
அப்புறப்படுத்தி விடுகிறாயே
என் நினைவுகள்
உன்னால் சுரண்டப்படும்
'கிட்' காட் என்று நினைத்தாயோ?
என் நினைவுகள்
வண்டுபோல்
சுழன்று வரும் போதெல்லாம்
கூம்புப் பூவாய்
குவிந்து கொண்டாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்காலம்

வானம் கவிழ்ந்து
மேகம் உடைந்து
மாரி மழை பொழியும்
காலம் எம்முன்னே
பூமி குளிர்ந்து
வில்லுக்குளம்
பெருக்கெடுத்து நிற்கும்
வயல் வெளிகள்
பச்சையிலைப் பந்தல்போடும்
வாய்க்கால் கரையோரம்
கயல்மீன்கள் துள்ளியபடியே
வலைகள் மீது ஊஞ்சலாடும்
தென்னைகள் வளைந்தபடி
தலையசைந்து நர்த்தனமிடும்
வளைந்த சாலையெங்கும்
வெள்ளநீர் பாய்ந்தோடும்
மழை மொக்குகளை
பார்த்தபடி இதயம் சுரக்கும்
காலம் மாறி
மழைக்காலம் துன்பமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிவாழ்வை அலைக்கழிக்கும்
ஆசையோடு பார்த்த மழைநீர்
வேதனைப் பொருளாகி
நோக்காடு செய்யும்
வானக் கூரையின்
அழுகையோ மழையென
மனங்கள் ஏங்கித்தவிக்கும்
இதுவே இன்றைய மழைக்காலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

1. உண்மை என்றும் உயிர்பெறும்
(கவிதை) (தேசிய விருது)
2. மழலைக்கோர் பாட்டு
(சிறுவர் பாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவரைப் பற்றி..........

சம்பூர் மண்ணிற் பிறந்து, திருமலை நகரில் தடம்பதித்து, இலக்கிய உலகில் தனக்கென்றோர் இடம்பிடிக்க, கவிதைத் தேரின் வடம்பிடித்து வலம்வரும் இவர் கவிஞர் கனகசூரியம் யோகானந்தன்.

ஆசிரியராய் இணைந்து நல் அதிபராய் உயர்ந்து அரும்பணியாற்றிவரும் இவ்வேளையில், இவர் சமுதாயப் பற்றுறுதி கொண்டவராய் பரிணமித்து, புதிய சமுதாயத் தேடலில் தன்னை அர்ப்பணிக்க ஆர்வம் மிக்கவராய் நிமிர்ந்து நிற்கும் இளைய தலை முறைக் கவிஞருள் ஒருவராகத் தன்னை இனங்காட்டி நிற்கின்றார்.

உண்மை என்றும் உயிர்பெறும் எனும் கன்னிக் கவிதைப் படைப்புக்கு தேசிய சாகித்திய விருதை 2006ல் தனதாக்கி பெருமை சேர்த்த இவரின் ஏனைய படைப்பு பாப்பாக்கள் "பாடிமகிழ, மழலைக்கோர் பாட்டு" எனும் சிறுவர் இலக்கியம்.

இவரின் இந்த ஆக்க இலக்கிய வரிசையில் "என்மன வானில்" எனும் இக்கவிதை நூலும் இவரது இலக்கிய ஆளுமையை வெளிப்படுத்தும் ஓர் கருவூலமாய் இன்று எமது கரங்களில் உள்ளது. இலங்கை ரூபாவாஹினியில் அடிக்கடி ஒளிபரப்பாகிவரும் "கோணேஸ்வரம்" பற்றிய மெல்லிசைப்பாடலும், திருகோணமலை வலய கீதமும் இவரின் சிறந்த மொழியாற்றலுக்கும், புலமைக்கும் ஏற்றதோர் ஏனைய எடுத்துக் காட்டுக்களாகும் எமது மண்ணில் ஒரு சிறந்த இலக்கிய பாரம்பரியம் செழித்தோங்க "என் மன வானில்" எனும் இக்கவிதைத் தொகுப்பைப் போன்று மேலும் பல படைப்பிலக்கியங்களை எதிர்காலத்தில் இவர் வெளிக்கொண்டுவர இவரை வாழ்த்துவதுடன், அதற்கான நல்லாதரவை இந்த மண்ணின் இலக்கிய ஆர்வலர்களும், படைப்பாளிகளும் வழங்குவார்களென நிச்சயமாக நான் நம்புகின்றேன்.

நன்றி

ஷெல்லிதாசன்
951, கல்லூரி வீதி,
திருகோணமலை.

ISBN 978-955-0328-00-0
9 789550 328000

ASTRA 0777 426174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org